அ.வ.எண் : 51/2022 நாள்: 02.09.2024

வா.சா.2 – திரு. ரத்தினம்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1. நான் இந்த வழக்கின் 4ம் வாதி ஆவேன். என் தந்தை பெயர் பால்ச்சாமி. எனது தாத்தா சுப்பையாவிற்கு வாரிசு என சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சுப்பையாவிற்கு மொத்தம் 11 குழந்தைகள் உள்ளார்கள். எனது தந்தை பாலுச்சாமி சுப்பையாவின் மகன். சுப்பையாவின் வாரிசுதாரர்கள் 11 பேர்களின் பெயர்களை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். சுப்பையாவிற்கு 11 குழந்தைகள் உள்ளார்கள் என ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

2. தேவப்பன் என்பவர் சுப்பையாவின் மூத்த மகன். எனது தகப்பனார் 28.08.2013ம் தேதி இறந்தார். சுப்பையாவின் இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வட்டாட்சியரிடம் வாரிசு சான்றிதழ் கேட்டு 2ம் வாதி தான் மனு தாக்கல் செய்தார். எனது தாத்தாவிற்கு இரண்டு தாரம் இருந்ததால் வட்டாட்சியர் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள சொல்லி மனுவை நிராகரித்தார் என்றால் சரிதான். முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.11/2017 ந.க.எண்.வ.நி.5(3)/180/2047, நாள் 09.08.2017 சுற்றறிக்கையின் படி ஒன்றுக்கு மேற்பட்ட கணவன் அல்லது மனைவி உள்ள இனங்களில் வட்டாட்சியர் வாரிசு சான்று வழங்க இயலாது என்றும், உரிய

நீதிமன்றத்தின் மூலம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி:–</u>**

1. எனது தாத்தாவின் வாரிசுகள் பெயர் 1. வேலம்மாள், 2. தேவப்பன், 3. பால்ச்சாமி (எனது அப்பா). 4. சுலோக்சனா, 5. ஆறுமுகம், 6. கோட்டையம்மாள், 7. முத்துலெட்சுமி, 8. மாரியப்பன், 9. சாரதா ஆவார்கள்.

//ஒப்பம்//

மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
தேவகோட்டை.